# ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பு – ( டர்ன் கீ முறை )

## (முதல் அழைப்பு)

**ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பு எண். 12 /கோ. ஒப்பந்தப்புள்ளி / 2019–20 /நாள். 06 .09.2019**

தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தின் சார்பாக நிர்வாகப் பொறியாளர்/ த கு வ. வாரியம் / ஊரக குடிநீர் திட்ட கோட்டம்/ எண்.16A, செங்கழுநீரோடைவீதி, காஞ்சிபுரம் அவர்களால் இத்துடன் இணைக்கப்பட்ட படிவத்தில் கண்டுள்ள வேலைகளுக்கு நிர்ணயிக்கப்பட்ட படிவத்தில் மூடி முத்திரையிடப்பட்ட ஒப்பந்தபுள்ளிகள் ஒட்டுமொத்த ஒப்பந்த சதவீத விலைப்புள்ளி அடிப்படையில் வரவேற்கப்படுகிறது. இந்த ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பில் குறிப்பிட்டுள்ள தேதியில் பிற்பகல் 3.00 மணி வரை ஒப்பந்தப்புள்ளிகள் பெற்றுக் கொள்ளப்பட்டு அன்றே பிற்பகல் 3.30 மணிக்கு வருகை புரிந்துள்ள ஒப்பந்தக்காரர்களின் முன்னிலையில் ஒப்பந்தப்புள்ளிகள் திறக்கப்படும்.(அலுவலக கடிகாரப்படி) தகுதிகள் மற்றும் விதிமுறைகள் ஒப்பந்தபுள்ளி ஆவணங்களில் குறிப்பிட்டுள்ளவாறு கண்டிப்பாக கடைப்பிடிக்கப்படும். ஒப்பந்தபுள்ளி ஆவணங்கள் அலுவலகத்தில் நேரிடையாக பணம் செலுத்தி பெற்றுக்கொள்ளலாம் அல்லது ஒப்பந்தபுள்ளியினை இலவசமாக www,twadboard.gov.in, இனையதளத்தின் மூலமாக பதிவிறக்கம் செய்துகொள்ளலாம்

| | | |
|---|---|---|
| ஒப்பந்தப்புள்ளி படிவங்கள் கிடைக்குமிடம் | – | நிர்வாகப் பொறியாளர் அலுவலகம்,<br>தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம்,<br>ஊரக குடிநீர் திட்ட கோட்டம்,<br>எண். 16A –செங்கழுநீரோடை வீதி,<br>காஞ்சிபுரம். |
| ஒப்பந்த புள்ளி விற்பனை காலம் | – | 09–09–2019 முதல் 20.09.2019 மாலை 5.45 வரை (அனைத்து பணிகளுக்கும் ) |
| ஒப்பந்தப் புள்ளி பெறப்படும் காலம் | – | 23–09–2019 பிற்பகல் – 3.00 மணி வரை (அனைத்து பணிகளுக்கும் ) |
| ஒப்பந்தப் புள்ளி திறக்கப்படும் நாள் | – | 23–09–2019 பிற்பகல் – 3.30 மணி அளவில் |
| ஒப்பந்தப் புள்ளி செல்லத் தக்க காலவரம்பு | – | 90 நாட்கள் |
| ஒப்பந்த முறை | – | மொத்தமாக ( டர்ன் கீ முறை) |

| வ. எண் | பணியின் பெயர் | முன்வைப்புத் தொகை | ஒப்பந்தப் படிவத்தின் விலை ( GST 12% வரிகள் உட்பட ) | ஒப்பந்ததாரரின் தகுதி |
|---|---|---|---|---|
| 1 | காஞ்சிபுரம் ஊராட்சி ஒன்றியம் கூரம் ஊராட்சி கூரம் விரிவு குடியிருப்பில் 30,000 லிட்டர் கொள்ளளவுள்ள மேல் நிலை நீர்த்தேக்கத் தொட்டி கட்டுதல் மற்றும் இதர பணிகள் | ரூ.10,000/– | ரூ.1120/– | வகுப்பு-3 அதற்கு மேல் |
| 2 | லத்தூர் ஊராட்சி ஒன்றியம் சிறுவாங்குனம் ஊராட்சி மருதேறி குடியிருப்பில் 20,000 லிட்டர் கொள்ளளவுள்ள மேல் நிலை நீர்த்தேக்கத் தொட்டி கட்டுதல் மற்றும் இதர பணிகள் | ரூ.10,000/– | ரூ.1120/– | வகுப்பு-4 அதற்கு மேல் |
| 3 | லத்தூர் ஊராட்சி ஒன்றியம் கல்குளம் ஊராட்சி கல்குளம் குடியிருப்பில் 30,000 லிட்டர் கொள்ளளவுள்ள மேல் நிலை நீர்த்தேக்கத் தொட்டி கட்டுதல் மற்றும் இதர பணிகள் | ரூ.10,000/– | ரூ.1120/– | வகுப்பு-3 அதற்கு மேல் |

தபால் மூலம் ஒப்பந்தப்புள்ளி வேண்டுமானால் ரூ.250/– கூடுதலாக செலுத்த வேண்டும். தபால் போக்குவரத்தில் ஒப்பந்தப்புள்ளி காணாமல் போதல், தாமதமாக கிடைக்கப் பெறுதல் முதலியவற்றிற்கு வாரியம் பொறுப்பேற்காது.

எந்த ஒரு அல்லது அனைத்து ஒப்பந்தப் புள்ளிகளையும், எவ்வித காரணங்களையும் குறிப்பிடாமல் நிராகரிப்பதற்கு கீழ் கையொப்பமிட்டவருக்கு முழு அதிகாரமுண்டு.

நிர்வாகப் பொறியாளர், தகுவவாரியம்,
ஊ.கு.தி. கோட்டம், காஞ்சிபுரம்.

பெறுநர்
அனைத்து ஒப்பந்தக்காரர்கள் ( சான்று அஞ்சல் மூலமாக)

நகல் நிர்வாக இயக்குநர், தகுவவாரியம், சென்னை–5 அவர்களுக்கு சமர்ப்பிக்கப்படுகிறது.

நகல் தலைமைப் பொறியாளர், தகுவவாரியம், வேலூர்–6 அவர்களுக்கு சமர்ப்பிக்கப்படுகிறது.

நகல் மேற்பார்வை பொறியாளர், தகுவவாரியம், காஞ்சிபுரம்– திருவள்ளூர் வட்டம், ஆலந்தூர் அவர்களுக்கு சமர்ப்பிக்கப்படுகிறது.

நகல் இக்கோட்டத்தைச் சார்ந்த அனைத்து உதவி நிர்வாகப் பொறியாளர்களுக்கும் விளம்பரத்திற்காக அனுப்பப்படுகிறது.

நகல் உதவி கணக்கு அலுவலர் , முதுநிலை வரைவு அலுவலர், கண்காணிப்பாளர்

நகல் விளம்பர பலகைக்கு